வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 13.02.2025 வியாழக்கிழமை | இதழ் : 45 | பக்கங்கள் : 12




# எமது கடல் வளத்தை அழிக்கும் நடவடிக்கையில் இந்திய மீனவர்

## நாசகார செயல் செய்துவிட்டு தொப்புள் கொடி உறவுகள் என கூறுவது பயனில்லை என்கிறார் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

**இலங்கையின் கடல் வளத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வாறு நாசகார செயலில் ஈடுபட்டுவிட்டு செல்லும் வழியில் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**



தமிழக மீனவர்கள் அத்துமீறும் செயற்பாடு தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழக மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள். தற்போது ஏழு நாட்களுக்கும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களை பிடிப்பது மட்டுமல்ல கடல் வளத்தையே

11

## மின்வெட்டு குறித்து இன்று தீர்மானம்!

கொழும்பு, பெப். 13

இன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படுமா என்பது தொடர்பில் இன்று காலை அறிக்கை வெளியிடவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை புனரமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், மேலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமா இல்லையா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் இதன் போது எட்டப்படும் என இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன

11

## முன்னாள் எம்.பி. திலீபன் கைது

புதுடில்லி, பெப். 13

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்குச் சென்ற ஈ.பி.டி.பி. கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் அங்கிருந்து பிறிதொரு கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில் இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து பொலிஸாரால் கடந்த திங்கள் கிழமை கைது செய்யப்பட்டார்.

11

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று இரண்டாம் நாளும் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 13

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை மற்றும் அதனை சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.



காணி உரிமையாளர்களால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஆதரவாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

11

## இனவாதத்தை தூண்டுகிறார் கஜேந்திரகுமார்

**தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்**

கொழும்பு, பெப். 13

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் இனவாதத்துடன் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தேசப் பற்றுள்ள தேசிய அமைப்பின்

11

## தையிட்டி விகாரையை பாதுகாப்பதில் அமைச்சரும் படையினரும் அக்கறை!

### சிறிநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, பெப். 13

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதி சட்ட ஆட்சியைப் பலப்படுத்தப்போவதாக தனது கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டார். ஆனால், சட்டவிரோதமாக சட்ட ஆட்சிக்கு எதிராக, தனியார் காணியில் ஆக்கிரமிப்பு ரீதியாகக் கட்டப்பட்ட தையிட்டி விகாரையைப் பாதுகாப்பதில் பௌத்த சாசன அமைச்சரும் பொலிஸாரும் படையினரும் அக்கறையாக உள்ளனர் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

சட்ட ஆட்சி தையிட்டி விகாரை விடயத்தில்

11

## பாதுகாப்பு தரப்பின் வர்த்தகத்தால் சிவில் சமூகத்துக்கு பெரும் பாதிப்பு

### வடக்கு ஆளுநரிடம் கூறினார் ஐ.நா. பிரதிநிதி

யாழ்ப்பாணம், பெப். 13

பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்துள்ள வர்த்தக நடவடிக்கைகளால் சிவில் சமூகத்தினருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் கலந்துரையாடியதாக ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ வடக்கு ஆளுநரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தலைமையிலான குழு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான வடக்கு மாகாண

11

## "ஆளுநர் தனது அற்ப பதவிக்காக மக்களை அடகு வைக்கக்கூடாது!"

யாழ்ப்பாணம், பெப். 13

சட்டவிரோத தையிட்டி விகாரையை வட மாகாண ஆளுநர் தனது அற்ப பதவிக்காக தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அடகு வைக்க வேண்டாம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணிமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

வலி. வடக்கு தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## தையிட்டி போராட்டத்தில் ஈ.பி.டி.பியும் பங்கேற்பு!

### படைகளுக்கு எதிரான கோஷத்தை தவிர்த்தனர்

யாழ்ப்பாணம், பெப். 13

தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு நேற்று புதன்கிழமை நடந்த போராட்டத்தில் ஈ. பி. டி. பி. கட்சியினரும் பங்கேற்றிருந்தனர்.

தையிட்டியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றி, அந்தக் காணிகளை மக்களிடமே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று முன்தினம் முதல் அங்கு தொடர் போராட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஈ. பி. டி. பி. கட்சியினரும் பங்கேற்றிருந்தனர். அந்தக் கட்சியின் பேச்சாளர்

11

## இந்த நூற்றாண்டின் மிகமோசமான மோசடியே கொள்கலன் விடுவிப்பு!

கொழும்பு, பெப். 13

இலங்கையில் இடம்பெற்ற மிக மோசமான மோசடியாக பரிசோதனை செய்யாது கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையை குறிப்பிட முடியும் என பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இந்த மோசடி மூலம் ஏற்பட்ட நட்டத்தை மதிப்பீடு செய்ய முடியாது என அவர்

11

## சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை விரைவாக விசாரிக்க புதிய திட்டம்!

கொழும்பு, பெப். 13

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளை விரைவில் நிறைவு செய்வதற்காக புதிய வேலைத்திட்டங்களை தயாரிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார தெரிவித்தார்.

சில சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பல வருடங்கள் செல்வதாக அவர் கூறினார்.

11

## சைபர் தாக்குதலிலிருந்து மக்களை பாதுகாக்க புதிய சட்டம் அவசியம்!

டுபாய், பெப். 13




சைபர் தாக்குதலில் இருந்து மக்களை பாதுகாக்க புதிய சட்டம் அவசியம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு விஜயம்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபரில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

## தேசிய விவசாயிகள் ஒன்றியம்

கொழும்பு, பெப். 13

**ஒக்ரோபர் மாதத்தில் பாரிய அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாக தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும்போக அறுவடை இன்னும் சில தினங்களில் நிறைவடையவுள்ளது. இத்தகைய பின்னணியில் வெள்ள அனர்த்தத்தின் காரணமாகவும் விவசாய நிலங்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று உரம் உரிய காலப்பகுதியில் கிடைக்கப் பெறாமை காரணமாகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இம்முறை பெரும்போகத்தில் 24-25 இலட்சம் மெற்றிக்தொன் நெல்லையே பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை காணப்படுகின்றது. ஆனால் கடந்த காலங்களில் 25-30 இலட்சம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் எடுத்து நோக்கும்போது இவ்வருடமே வரலாற்றில் முதற்தடவையாக மிக குறைந்தளவு பெரும்போக அறுவடையாக பதிவாகியுள்ளது. இதன் காரணமாக ஒக்ரோபர் மாதமாகும் போது பாரிய அரிசித் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலை காணப்படுகின்றது- என்றார். (அ)

# ஐ. நா. நிரந்தர வதிவிட பிரதிநிதி வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப்.13

இலங்கைக்கான ஐ. நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தலைமையில், இலங்கையில் பணியாற்றும் ஐ. நாவின் அனைத்து முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையிலான வடக்கு மாகாண அலுவலர்களையும், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களையும் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

முன்னதாக, வடக்கு மாகாண ஆளுநருக்கும், இலங்கைக்கான ஐ. நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் சிநேகபூர்வமான சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகவும், அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண ஆளுநருடன், ஐ. நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன், ஐ.நாவின் அனைத்து முகவர் அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

ஐ. நாவின் பல்வேறு அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் உதவிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்ததுடன், குறிப்பாக மீள்குடியமர்வின் போதான உதவிகளை மறக்க முடியாது என ஆளுநர் குறிப்பிட்டார். அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதற்கு இந்த உதவிகள் பெரிதும் உறுதுணையாக இருந்ததாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும் கிராமிய அபிவிருத்தியில் இன்னும் பல மைல் தூரம் பயணிக்க வேண்டியிருப்பதை குறிப்பிட்ட ஆளுநர், அந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார். (எ - 02 - 05)

# "ஐக்கிய தேசிய கட்சியுடன் பேச்சு தற்காலிக நிறுத்தம்"

கொழும்பு, பெப். 13

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளும் கலந்துரையாடல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களை அவர் சந்தித்தபோது தெரிவித்தவை வருமாறு,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பான கலந்துரையாடல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எம்முடைய நோக்கம் ஐக்கிய தேசிய கட்சியுடன் மாத்திரம் இணைந்து கொள்ளும் குறுகிய நோக்கம் அல்ல. நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள்.

வலதுசாரி பொருளாதாரத்தை நம்புபவர்கள். அந்த வகையில் வலதுசாரி தரப்பினர் ஒன்றிணையவேண்டும் என நம்புபவர்கள். வலதுசாரி அணிகள் பிளவுபடும்போது 25 இலட்சம் பேர் வரை வாக்களிப்பதற்கு வாக்குச்சாவடிக்கு செல்வதில்லை.

வலதுசாரிக் கொள்கையை வெற்றி பெற செய்யவேண்டும் என்றால் வலதுசாரி கொள்கை உடையவர்களை வாக்குச்சாவடிக்குக் கொண்டு செல்லக்கூடிய நிலை ஏற்படவேண்டும் -என்றார். (அ)

# காற்று மாசுபாட்டால் கர்ப்பவதிகள் பாதிப்பு

கொழும்பு, பெப். 13

காற்றின் தரம் குறைந்து வருவதன் காரணமாகக் கர்ப்பவதித் தாய்மார்களின் கரு பாதிக்கப்படும் என்று சுவாச வைத்தியர் பேராசிரியர் துமிந்த யசரத்னே தெரிவித்தார்.

மாசுபட்ட காற்றானது கருவின் எடையைக் குறைக்க வழிவகுக்கும் என்பதுடன் புதிதாகப் பிறந்த குழந்தைகளில் சுவாசப் பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் கூறினார்.

மேலும் சிசு இறந்த நிலையில் பிறக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# பண்பு நிறைந்த பத்திரிகையாளன்... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

பாரதி போன்ற அனுபவமும் ஆற்றலும் கொண்ட ஒருவரை அந்தப் பொறுப்பில் அமர்த்தினால் எனது பணிக்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் திடமாக நம்பினேன். முகாமைத்துவமும் எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு பாரதியை ஞாயிறு தினக்குரலுக்கு பொறுப்பாக நியமித்தது. வாரப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு பாரதியின் பங்களிப்பு மகத்தானது.

செய்திகளைக் கையாளுவதை விடவும் வாரப் பத்திரிகைக்கு உரிய சிறப்பு அம்சவிடயதானங்களைக் கையாளுவதில் பாரதியின் ஆற்றல் அபாரமானது என்பதை அவர் தனது பணியின் மூலம் நிரூபித்தார். கலை இலக்கியத்துறை சார்ந்தவர்களை ஞாயிறு தினக்குரலின் பக்கம் கவர்ந்ததில் பாரதியின் பங்களிப்பு முக்கியமானது.

தினக்குரலின் முகாமைத்துவத்தில் 2010 ஆம் ஆண்டுக்கு பிறகு ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து நாமெல்லோரும் வீரகேசரி காரியாலயத்தில் பணியாற்ற வேண்டியிருந்தது. பாரதியின் திறமையைக் கண்ட வீரகேசரி முகாமைத்துவம் பாரதியை தங்களுக்காக பயன்படுத்துவதில் நாட்டம் காட்டியதை நான் நன்கு அறிவேன். நவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடனும் அவர் தன்னை எளிதாகவே பரிச்சயமாக்கிக் கொண்டார். பாரதி ஓய்வுபெற்று யாழ்ப்பாணம் திரும்பிய பிறகு அங்குள்ள சில ஊடகங்களில் பணியாற்றினார். ஆனால், இறுதியில் வீரகேசரி நிறுவனம் அதன் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் தொடர்பாசிரியராக நியமிப்பதற்கு ஒருவரை தேடிய போது பாரதியை அதற்கு பொருத்தமானவராக அடையாளம் கண்டு நியமித்தது.

அந்த நியமனம் பாரதியின் வீரகேசரிக்கான மீள்வருகையாக அமைந்தது. ஆனால், அதில் சில மாதங்களே பணியாற்றிய நிலையில் அவர் எம்மை விட்டு பிரிந்துவிட்டார். திடீரென்று தாக்கிய பக்கவாத நோய் சில வாரங்களில் அவரைப் பலியெடுத்துவிட்டது.

ஊடகத்துறையில் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் பல மட்டங்களில் பாரதிக்கு பெருமளவில் நண்பர்கள், அபிமானிகள் இருந்தார்கள். வெறுமனே அலுவலகத்திற்குள் தன்னை முடக்கிக் கொண்ட ஒரு பத்திகையாளராக இல்லாமல் வெளித் தொடர்புகளை நிறையவே அவர் ஏற்படுத்திக்கொண்டதன் விளைவாக புலம்பெயர் தமிழ் சமூகத்திலும் அவர் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார். பல வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டு தனது அனுபவத்தை வளப்படுத்திக் கொண்டார். புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் இயங்கும் சில ஊடகங்களுக்காக பல தடவைகள் என்னை நேர்காணல் செய்து என்னையும் அந்த சமூகத்துக்கு அறிமுகம் செய்தார்.

அவரது மறைவை ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கூறுவதை விடவும் நிச்சயமாக ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு என்றே நான் கூறுவேன். ஏனென்றால், பாரதியைப் போன்ற பரந்த அனுபவமும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் கொண்ட பத்திரிகையாளர் தமிழ் ஊடகத்துறைக்கு வேண்டும்.

எனது தனிப்பட்ட குறிப்பை இந்த சந்தர்ப்பத்தில் கூறவிரும்பு கிறேன். விரும்புகிறேன். காலஞ்சென்ற முதுபெரும் இலக்கியவாதி டொமினிக் ஜீவா ஒரு தடவை என்னை அணுகி தனது மல்லிகை சஞ்சிகையில் அட்டைப்பட பிரமுகராக என்னை பதிவு செய்ய விரும்புவதாகக் கூறினார். "அதற்கு யாரிடம் உங்களைப் பற்றி ஒரு கட்டுரையை வாங்கலாம்? " என்று அவர் என்னையே கேட்டார்." அவுஸ்திரேலியாவில் வாழும் எனது நெருங்கிய நண்பன் முருகபூபதி அல்லது பாரதியிடம் என்னைப் பற்றிய கட்டுரையை வாங்கினால் மாத்திரமே எனது புகைப்படத்தை தருவேன் " என்று நான் ஜீவாவிடம் திட்டவட்டமாக கூறிவிட்டேன்.

அவர் உடனே தினக்குரல் அலுவலகத்தில் இருந்த பாரதியின் அறைக்குச் சென்று அவரிடம் விடயத்தை சொன்னதாக அறிந்தேன். அடுத்த மல்லிகை இதழ் எனது படத்தை தாங்கி வந்திருந்தது. ஜீவாவே அதைக் கொண்டு வந்து தந்தார். உள்ளே பாரதி என்னைப் பற்றி எழுதிய கட்டுரை. அதை வாசித்த பிறகுதான் பாரதி என்னைப் பற்றி எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார் என்பதையும் என்மீது எவ்வளவு அன்பை வைத்திருக்கிறார் என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

பாரதி தனது அபிப்பிராயங்களை பெரிதாக வெளியில் பேசாத ஒரு பிறவி. ஆனால், நிதானமாக, ஆரவாரமின்றி சகலவற்றையும் அவதானித்து செயல்பட்ட ஒருவர். பரபரப்புக் காட்டுவதில் நம்பிக்கையில்லாத ஒருவர். ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை கச்சிதமாகச் செய்வதில் கண்ணாயிருப்பார். வீணான அபிப்பிராயங்கள் குறித்து அக்கறை காட்டமாட்டார்.

அண்மைக்காலமாக நானும் சுகவீனமுற்று சத்திரசிகிச்சைக்கு பிறகு குணமடைந்திருக்கிறேன். பெரும்பாலும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் என்னை கடந்த மூன்று வருடங்களாக பாரதி வாரம் ஒரு முறை யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுகம் விசாரிக்கவும் நாட்டு நடப்புகளைப் பேசவும் தவறுவதில்லை. பத்திரிகைகளுக்கு எழுதும் அரசியல் கட்டுரைகளைப் பற்றி காய்த்தல் உவத்தல் இன்றி கருத்துகளைக் கூறுவார். மனமுவந்து நான் பேசும் பாரதியிடம் இருந்து இனிமேல் தொலைபேசி அழைப்பு வராது.

பாரதியின் மனைவி தேவகி எனது ஊரான வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்தவர். அதனால் பாரதி எம்மவர் என்று மேலதிக உறவு கொண்டாடும் உரிமையும் எனக்கு இருப்பதாக நினைத்துக் கொள்வேன். மனைவிக்கும், மகன் பார்த்திபனுக்கும் சகோதரிக்கும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

"பாரதி..... உனக்கு அஞ்சலிக் குறிப்பை எழுதும் துரதிர்ஷ்டம் எனக்கு வரும் என்று நான் நினைத்ததில்லை. நீ முந்தி விட்டாய். சென்றுவா... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஊழநாடு
13.02.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமெரிக்க உதவி நிறுவன விவகாரம்

அமெரிக்காவின் சர்வதேச உதவிகளுக்கான முகவர் அமைப்பான யு. எஸ். எய்ட் எனப்படும் நிறுவனத்தின் உலகளாவிய செயல்பாடுகளுக்கான நிதியை தற்காலிகமாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிறுத்தியிருக்கின்றார். இதனால் பல மூன்றாம் உலக நாடுகளின் அரசுசாரா நிறுவன செயல்பாடுகள் நிச்சயமற்ற நிலையை அடைந்திருக்கின்றன. இதில் இலங்கையும் ஒன்று.

கொழும்பை மையப்படுத்தி இயங்கிவரும் அனைத்து அரசுசாரா நிறுவனங்களுமே பெரும்பாலும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியைப் பெற்றுக்கொண்ட - பெற்றுவரும் நிறுவனங்கள்தான். இதில் ஒரு சில அமைப்புகள் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியை தொடர்ச்சியாக பெறுபவர்கள். உதாரணமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சமாதானப் பேரவை போன்ற நிறுவனங்கள் இதில் பிரதானமானவை. இதேபோன்று, வடக்கு - கிழக்கில் இயங்கிவரும் சிறிய அரசுசாரா நிறுவனங்களும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியில்லாவிட்டால் இயங்க முடியாத நிலைமை ஏற்படும்.

ட்ரம்ப் நிர்வாகம் பல அதிரடியான உத்தரவுகளை பிறபித்து வருகின்றது. அதில் முதன்மையானது அமெரிக்க உதவி நிறுவனம் தொடர்பானது. இலங்கையில் ஊடகங்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிழிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் ட்ரம்ப் நிர்வாகம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ட்ரம்ப் நிர்வாகத்தின் பார்வையில் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதி பயனற்ற வகையில் செலவழிக்கப்படுகின்றது. அதனால் எதிர்பார்த்த பயன்கள் கிடைக்கவில்லை.

இலங்கை விடயத்தை ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டால் ட்ரம்ப் நிர்வாகத்தின் குற்றச்சாட்டில் பொருளிருப்பதை காணலாம். ஏனெனில் இனங்களுக்கிடையில் சாமானத்தை கட்டியெழுப்பப் போவதாகக் கூறியே பல மில்லியன்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆனால், யுத்தம் முடிவடைந்து பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட, ஆகக் குறைந்தது அரசமைப்பிலுள்ள விடயங்களைக் கூட அரசாங்கங்கள் அமுல்படுத்த முயற்சிக்கவில்லை. அவற்றை புறம்தள்ளியே செயல்பட்டிருக்கின்றன.

இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்னுமடிப்படையில் செலவழிக்கப்படும் அமெரிக்க உதவி நிறுவனத்தின் அரசுசாரா நிறுவன நிதிகள் தூர நோக்கோடு செவழிக்கப்படவில்லை. அதேபோன்று அவ்வப்போது உல்லாச விடுதிகளில் ஒன்றுகூடி சமஷ்டி தொடர்பிலும் புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் உரையாடப்படுகின்றது. ஆனால், அரசியல் தீர்வு விடயத்தில் ஓர் அடிகூட முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இதிலுள்ள முரண்பாடான விடயம் என்னவென்றால், ஒருபுறம் சமாதானம் பற்றி பேசுவதற்காகவும் அரசுசாரா நிறுவன நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன - மறுபுறம், இலங்கையின் சுதந்திர தினத்தின்போது, கறுப்பு கொடி காட்டுவதற்கும் அரசுசாரா நிறுவனத்தின் நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் அமெரிக்க உதவி நிறுவனத்தின் இலங்கைத் திட்டங்களுக்கான உயர் அதிகாரிகளிடம் போதிய மதிப்பீடுகள் இருந்ததா என்பதிலும் தெளிவில்லை. இதேவேளை தங்களின் திட்டங்களை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்ட உள்ளூர் பணியாளர்களின் ஆற்றல் மற்றும் அரசியல் மதிப்பீடுகள் தொடர்பிலும் அமெரிக்க நிறுவன உயர் அதிகாரிகளிடம் போதிய மதிப்பீடு இருந்ததா என்பதிலும் தெளிவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் அமெரிக்க உதவி நிறுவனம் எதிர்காலத்திலாவது இந்த விடயங்களை கருத்தில் கொண்டால், நிதி சரியான திட்டங்களுக்கு சரியான அரசுசாரா நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் சூழல் உருவாகலாம்.

# பண்பு நிறைந்த பத்திரிகையாளன் பாரதியை இழந்து நிற்கும் தமிழ்ப் பத்திரிகை உலகம்

வீரகத்தி தனபாலசிங்கம்



இலங்கை பத்திரிகை நிறுவனமும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து மவுண்ட் லவினியா ஹோட்டலில் ஜனவரி 7ஆம் திகதி இரவு நடத்திய "சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள்" வழங்கும் வனப்புமிகு விழாவில் இறுதியாக நான் பாரதியைச் சந்தித்தேன். நீண்ட நேரமாக அவருடன் பேசி, மீண்டும் சந்திப்போம் என்று கூறி இருவரும் விடை பெற்றுக் கொண்டோம். ஆனால், அதற்கு பிறகு ஒரு மாதமும் இரு நாட்களும் கடந்த நிலையில் கடந்த ஞாயிறன்று பாரதி எம்மிடமிருந்து நிரந்தரமாகவே விடை பெற்ற துயர்நிறைந்த செய்தி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

கடந்த சில வாரங்களாக பாரதி சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் என்ற போதிலும், அவர் விரைவில் சுகமடைந்து விடுவார், அவரைச் சென்று பார்க்கலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். உண்மையில், அவர் எம்மத்தியில் இன்று இல்லை என்பதை நம்புவதற்கு மனம் மறுக்கிறது. பாரதியின் மறைவு எம்மிடமிருந்து பண்பும் ஆற்றலும் நிறைந்த ஒரு சிறந்த பத்திரிகையாளனை அபகரித்துச் சென்று விட்டது.

பாரதி ஒரு சிறந்த பத்திரிகையாளன் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த மனிதநேயன். அரசியலைப் போன்றே போட்டியும் சூழ்ச்சியும் நிறைந்ததாக மாறிவிட்ட ஊடகத்துறையில் பாரதியைப் போன்று முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சகலருடனும் இணக்கப் போக்குடன் ஊடாட்டங்களைச் செய்யும் ஒரு பத்திரிகையாளனை இனிமேல் காணமுடியுமா என்று மனம் ஏங்குகிறது. மற்றவர்களுக்கு தீங்கு செய்வதை கனவிலும்கூட நினைத்துப் பார்த்திருக்காத ஒரு பிறவி பாரதி.

என்னைப் பொறுத்தவரை, பத்திரிகைத் துறைச் சகபாடி ஒருவர் என்பதற்கு அப்பால் என்னை நன்கு புரிந்து கொண்டு, நான் இழைத்திருக்கக்கூடிய தவறுகளையும்கூட பொருட்படுத்தாமல் என்னுடன் நீண்ட காலம் பழகிய நெருங்கிய நண்பனை இழந்து நிற்கிறேன். பாரதிக்கும் எனக்கும் இடையிலான ஊடாட்டம் அவர் 1990களின் முற்பகுதியில் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டதுடன் தொடங்கியது. எங்களுக்கு இடையிலான நெருக்கத்துக்கு 35 வயது.

கொழும்பில் இருந்து பணியாற்றிய எங்களைப் போன்றவர்களைப் போலன்றி, பாரதி பத்திரிகைத் துறையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வளர்ந்தவர். ஆயுமேந்திய தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் தோற்றம் பெறத்தொடங்கிய நாட்களில் அவரின் பத்திரிகைத்துறைப் பிரவேசம் இடம் பெற்றது. முதலில் 1980களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு, முரசொலி பத்திரிகைகளில் பணியாற்றி பாரதி இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் விபத்தொன்றில் சிக்கிய பின்னரே வீரகேசரியில் இணைந்துகொணடார்.

பாரதியின் பத்திரிகைத்துறை வாழ்வு உள்நாட்டுப்போர் நீடித்த மூன்று தசாப்தங்களையும் போர் முடிவுக்கு வந்ததற்கு பின்னரான கடந்த 15 வருடங்களையும் உள்ளடக்கியதாகும். அதன் காரணமாக அவர் இயல்பாகவே தமிழ்த் தேசியவாத அரசியல் கோட்பாடுகளில் நிறைந்த ஈடுபாடு கொண்டவராக, தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் பற்றுறுதியுடன் நியாயப்படுத்துவதற்கு தனது எழுத்தை அர்ப்பணித்தவராக வாழ்ந்தார்.


அதன் விளைவாக சிறந்ததோர் அரசியல் விமர்சகராகவும் அவரால் விளங்க முடிந்தது. பாரதி வீரகேசரியில் இணைந்த ஆரம்ப நாட்களிலேயே தேசிய இனப்பிரச்னை தொடர்பிலான சில ஆய்வு முயற்சிகளுக்கு முகாமைத்துவம் அவரைப் பயன்படுத்தியதை நான் நன்கு அறிவேன். அந்த ஆய்வுகளை ஒரு நூலாக்கும் முயற்சியும்கூட மேற்கொள்ளப் பட்டது. பாரதி அரசியல் மற்றும் சமூகப் பிரச்னைகள் குறித்து நிறையவே எழுதியிருக்கிறார்.

பத்திரிகையாளர்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டவராக விளங்கிய பாரதி பல தடவைகள் இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் தலைவராக பணியாற்றினார்.

தினக்குரல் பத்திரிகை 1997 ஏப்ரலில் தொடங்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியராக நான் இணைந்து கொண்டேன். என்னுடன் முதலில்கூட வந்தவர்கள் பாரதியும் சீவகனுமேயாவர். புதிய பத்திரிகையில் இணைவதில் உங்களுக்கு தயக்கம் எதுவும் இல்லையா என்று நான் இருவரையும் கேட்டபோது "நீங்கள் போகிறீர்கள்... எங்களுக்கு என்ன தயக்கம்" என்று இருவரும் கூறியது இன்றும் என் காதில் எதிரொலிக்கிறது. அந்தளவுக்கு என்மீது பாரதி வைத்திருந்த நம்பிக்கை உணர்வு என்னை நெகிழ வைத்தது. இறுதிவரை என்னுடனான அந்த நெருக்கத்தை அவர் பேணினார்.

தினக்குரலின் பிரதம ஆசிரியராக 2004 ஏப்ரலில் என்னை பொறுப்பேற்குமாறு முகாமைத்துவம் கேட்டபோது அவர்களிடம் நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். பாரதியை ஞாயிறு தினக்குரலின் பொறுப்பாசிரியராக நியமிப்பதாக இருந்தால் மாத்திரமே நான் பிரதம ஆசிரியராக பொறுப்பேற்பேன் என்று கூறினேன். (2ஆம் பக்கம் பார்க்க...)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி -13 வியாழக்கிழமை
குரோதி வருடம் - மாசி 01
நல்ல நேரம்:10.30 -12.00
ராகு காலம்:1.30 -3.00
திதி :பிரதமை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். புதுவேலை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொத்துப் பிரச்சினை ஒன்று தீரும்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். மனதில் நிம்மதி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசபட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம் . கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போவது நல்லது. நம்பி ஏமாற வேண்டாம்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும் . வாகனத்தில் கவனம் தேவை.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். நெருங்கியவர்களுக்காக சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும்.

**மகரம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். மனைவி வழியில் ஆதரவுபெருகும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்தி தரும்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறை வேறும். அக்கம்- பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்த லாபம் வரும்.

# வவுனியா கடைத்தொகுதியிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா, பெப்.12

வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதியிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பசார் வீதியில் அமைந்துள்ள நகைப்பட்டறை ஒன்றில் தொழில் புரிந்துவந்த குறிந்த நபர் கடந்த 10 ஆம் திகதி இரவு வீட்டிலிருந்து தொழில் நிமித்தம் கடைக்கு வந்தார்.

இந்த நிலையில், அவரது சடலம் பட்டறை அமைந்துள்ள மாடிக்கட்டடத்தின் கீழ் தளத்திலிருந்து நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டது.

சம்பவத்தில் சாந்த சோலை பகுதியைச் சேர்ந்த சுப்பையா ஆனந்தன் (வயது - 40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

இதேவேளை, குறித்த நபர் மாடிக்கட்டடத்தில் இருந்து தவறி வீழ்ந்ததால் மரணமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இரு வேறு திருட்டு சம்பவங்கள் தொடர்பில் வவுனியாவில் பொலிஸாரால் ஒருவர் கைது

வவுனியா, பெப்.13

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கடந்த மாதம் வீடு ஒன்றிலிருந்து கைத்தொலைபேசி ஒன்றும் பிறிதொரு வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், அதற்கு மேலதிகமாக வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைவாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் கடமையேற்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளராக செ. கிருபாகரன் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் முன்னிலையில் பிரதம கணக்காளராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், கணக்காளர்,

நிர்வாக உத்தி யோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



பிரதம கணக்காளராக கடமையேற்ற செ. கிருபாகரன், முன்னர் இலங்கை புகையிரத திணைக்களத்தில் பிரதம கணக்காளராக கடமையாற்றி இடமாற்றம் பெற்று வந்துள்ளார். (எ- 05)

வவுனியாவில் மூன்று பிரிவுகளுக்கான

# திடீர் மரண விசாரணை அதிகாரியாக சுரேந்திரசேகரன் சத்தியப்பிரமாணம்

வவுனியா, பெப்.13

வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக லா. சுரேந்திரசேகரன், வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக செயல்பட்டு வந்த லா. சுரேந்திரசேகரன் தற்போது கடமையாற்றும் பகுதிக்கு மேலதிகமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெங்கல



செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில், மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாப்பைக் குறைப்பதை நியாயப்படுத்த எந்த காரணமும் இல்லை

## பெரமுன வழக்கறிஞர்கள் சங்கம்

கொழும்பு, பெப். 13

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பைக் குறைப்பதை நியாயப்படுத்தும் எந்த புலனாய்வு அறிக்கையும் இல்லை என்றும், அப்படி இருந்தால், அத்தகைய அறிக்கைகளை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதை அவர்கள் சவால் செய்கிறார்கள் என்றும் இலங்கை பொதுஜன பெரமுன வழக்கறிஞர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வழக்கறிஞர்கள் சங்கத்தினர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதியை வேறொருவருக்கு பலிகடாவாக்குவதற்காக அவரது பாதுகாப்பு வலயத்திலிருந்து அகற்றப்படுவதாக சில சந்தேகங்கள் எழுகின்றன.

அதேவேளை, நாட்டு மக்களிடையே மீண்டும் இரத்தக் களரி மற்றும் மோதல்களை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும், சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தற்போதைய அரசாங்கமே அதன் விளைவுகளை அனுபவிக்கவேண்டியிருக்கும்.

எனவே, மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் முடிவுகளை எடுக்கக்கூடாது. அவரது உயிருக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்பட்டால், முடிவுகளில் கையெழுத்திட்ட அனைத்து அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டியிருக்கும்-என்றார். (அ)

# எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் கடவுச்சீட்டு வரிசைக்கு முடிவு!

கொழும்பு, பெப். 13

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள கடவுச்சீட்டு வரிசைகளை அகற்றுவதற்கு முடிவு செய்துள்ளதாக குடிவரவு - குடியகல்வுத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அடுத்த வாரத்துக்குள் 24 மணி நேர சேவை தொடங்கப்படுவதால், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் உள்ள அனைத்து ஊழியர்களும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரவும் பகலும் உழைக்க உறுதி பூண்டுள்ளனர்.

கடவுச்சீட்டு வழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் உள்ள அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.

தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதால், நாங்கள் அவ்வாறு செய்ய உறுதியளிப்போம்.

இருப்பினும், இந்தப் பிரச்னை கடந்த கால அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டது.

மீதமுள்ள ஊழியர்களை மட்டுமே கொண்டு 24 மணி நேர சேவையை வழங்குவது மிகவும் கடினமான பணி, பல நாட்கள் வரிசையில் காத்திருப்பதன் மூலம் பொதுமக்கள் அனுபவிக்கும் சிரமங்களுக்கு இது பொருந்தாது-என்றார். (அ)

# நவீன கட்டமைப்பு தோல்வியே மின்சாரத் தடைக்குக் காரணம்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 13

மின்விநியோக கட்டமைப்பை கண்காணிப்பதற்கு பெலவத்தைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன கட்டமைப்பின் செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளன. இந்த உண்மையை மறைப்பதற்காகவே அரசாங்கம் குரங்கை குற்றஞ்சாட்டுகிறது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மின் துண்டிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-இலங்கை மின்சார சபையின் கட்டமைப்பு முகாமைத்துவம் அல்லது முறைமை கட்டுப்பாடு குரங்கு மோதி செயலிழக்கும் என்று குறிப்பிடுவது நகைச்சுவையானது. குரங்கினால் தேங்காய் விலையேற்றம், நாய், பூனைகளுக்கு உணவளிப்பதால் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டவர்கள். மின்விநியோக தட்டுப்பாட்டுக்கு குரங்கு மீது பழிசுமத்துவது ஆச்சரியத்துக்குரியதொரு விடயமல்ல. ஆனால் உண்மை இதுவல்ல,


பாணந்துறை பகுதியில் ஒரு பகுதியில் உள்ள மின்பிறப்பாக்கியில் குரங்கு மோதினால் அந்த பகுதிக்கு மாத்திரமே மின்விநியோகம் பாதிக்கப்படும். முழு இலங்கைக்குமான மின்கட்டமைப்புக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படாது.

மின்விநியோக கட்டமைப்பை கண்காணிப்பதற்கு பெலவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன கட்டமைப்பின் செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளது.-இந்த உண்மையை மறைப்பதற்காகவே அரசாங்கம் குரங்கை குற்றஞ்சாட்டுகிறது.

நாளாந்த மின்னுற்பத்தியை காட்டிலும் மின்பாவனைக்கான கேள்வி அதிகளவில் காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 70 சதவீத இயற்கை மின்னுற்பத்திக்கு செல்வதாக குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கிரீன் எனர்ஜி திட்டத்துக்கமைய சூரிய மற்றும் காற்றாலை மின் சக்தி ஊடாக 2600 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் ஒன்றிணைக்க முடியும் என்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆகவே இந்த அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் முறையாக செயற்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# சுவிற்சர்லாந்து தூதுவருடன் சஜித் பிரேமதாஸ சந்திப்பு!



கொழும்பு, பெப். 13

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது .

இந்த சந்திப்பானது கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சுவிற்சர்லாந்து போலவே தமது நாட்டிலும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு சுவிற்சர்லாந்து தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவும் கலந்து கொண்டார். (அ)

# அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றதாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்!

## பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன

கொழும்பு, பெப். 13

அமைச்சர் பதவியை விட்டு தான் ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன தெரிவித்தார்.

சில தினங்களுக்கு மாத்திரமே தாம் ஆஸ்திரேலியாவுக்கு சென்றதாகவும் எதிர்வரும் 20 ஆம் திகதி மீள இலங்கைக்கு திரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பதவியை விட்டு தான் ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக சுகத் திலகரத்ன தொடர்பில் பரவும் செய்தி குறித்துக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே விடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்த பின்னரே ஆஸ்திரேலியாவுக்கு வருகைத் தந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தனது தனிப்பட்ட விடயத்துக்காக ஆஸ்திரேலியா வந்ததாகவும், இருப்பினும், தற்போது இலங்கையில் விளையாட்டு அமைச்சில் நடைபெறும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# அரச ஊழியர்கள் சம்பளத்தை மேலும் அதிகரிக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 13

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களின் சம்பளத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சோசலிச மக்கள் முன்னணியின் செயலாளர் வைத்தியர் ஜீ. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரச ஊழியர்களின் சம்பளத்தை மேலும் 20ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த அரசாங்கத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கங்கள், அதனை இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் பொருட்கள் மற்றும் சேவை கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளை கருத்திற்கொள்ளும்போது அரச ஊழியர்களின் சம்பளம் நிச்சயமாக அதிகரிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அரச மற்றும் தனியார் துறையின் சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தி 7அம்ச கோரிக்கை ஒன்றை பொது சேவை தொழிசங்க சம்மேளனம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முன்வைத்திருக்கிறது.

அதில் நீண்டகாலமாக அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்காமல் இருப்பது தொடர்பில் குறிப்பிட்டிருக்கிறோம்.

மேலும் நாட்டின் மொத்த தொழிலாளர்களின் பெரும்பான்மை ஊழியர்கள் அரச சார்பு மற்றும் தனியார் துறைகளிலே இருந்து வருகின்றனர்.

தற்போதுள்ள பணவீக்க நிலைமையில் அவர்களின் தனிப்பட்ட பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 2023 குடிசன மற்றும் புள்ளிவிபர திணைக்கள அறிக்கைக்கு அமைய 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 66,000 ரூபாவுக்கும் அதிகமாகும்.

மேலும், இந்த கோரிக்கைகளுடன் அரச ஊழியர்களின் கொடுப்பனவு, அவர்களின் சம்பள முரண்பாடு,

அரச துறைக்கு இணைத்துக் கொள்ளல் மற்றும் பதவி உயர்வு மற்றும் அரச சொத்துக்கள விற்பனை செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் எமது யோசனையை ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கிறோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரை ஜே.வி.பியே பொறுப்புக் கூறவேண்டும்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வலியுறுத்து

கொழும்பு, பெப். 13

**அரகலயவின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதற்கு மக்கள் விடுதலை முன்னணி பொறுப்புக் கூற வேண்டும். அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தீ வைத்ததை பற்றி பேசவில்லை. இழப்பீட்டுத் தொகையை பட்டியலிடுவதை போன்று தீ வைத்தவர்களின் விவரத்தை அரசாங்கத்தால் பட்டியலிட முடியுமா என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் தனது இயலாமையை மறைத்துக் கொள்ள ஒன்று குரங்குகள் மீது பழி போடுகிறது. அல்லது கடந்த கால அரசாங்கம் தொடர்பான அறிக்கை, பட்டியலை வெளியிடுகிறது. ஆனால் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த வாரம் பாராளுமன்ற அமர்வில் மே 09 கலவரத்தில் பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகள் பெற்றுக் கொண்ட இழப்பீட்டுத் தொகையை சிரித்துக் கொண்டே பட்டியலிட்டார். ஆனால் அவர் ஒரு சில விடயங்களை மூடி மறைத்துள்ளார்.

போராட்டத்தின்போது எனது வீடு உட்பட 14 கட்டடங்கள் தீக்கிரையாக்கப் பட்டன. எனக்கு எவ்வாறான அடிப்படையில் அந்த தொகை கிடைக்கப் பெற்றது என்பதை அமைச்சரவைப் பேச்சாளர் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வில்லை.

இவர்கள் தேர்தல் காலத்திலும் மக்கள் மத்தியில் வெறுப்பினை விதைத்தார்கள். ஆட்சிக்கு வந்த பின்னரும் வெறுப்பையே விதைக்கிறார்கள்.

2022 மே 09 கலவரத்தின் போது அரசியல்வாதிகளின் வீடு தீ வைக்கப்பட்டமைக்கு மக்கள் விடுதலை முன்னணியினர் பொறுப்புக் கூறவேண்டும்.

இந்த சம்பவத்துடனான வழக்கில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மே 09 சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். எமது அரசாங்கத்தில் நிச்சயம் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பொறுப்புதாரிகள் பொறுப்புக் கூறவேண்டும்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அரசியல்வாதிகள் பெற்றுக் கொண்ட இழப்பீட்டுத் தொகை பற்றி சிரித்துக் கொண்டு பட்டியலிடுகிறார்.

ஆனால் பற்றவைத்த தீ பற்றி பேசவில்லை. வன்முறையை தூண்டி விட்டு பாரிய அழிவை ஏற்படுத்தியவர்களின் பெயர் விவரங்களை அரசாங்கத்தால் பட்டியலிட முடியுமா?-என்றார். (அ)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 139 பேருக்கு உடன் இடமாற்றம்!

கொழும்பு, பெப். 12

பொலிஸ் திணைக்களத்தில் உள்ள மொத்தம் 139 பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் இலங்கை பொலிஸ் அறிவித்துள்ளது.

இது திணைக்களத்தின் வரலாற்றில் ஒரே நேரத்தில் மிகப் பெரிய இடமாற்றத்தைக் குறிக்கிறது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இடமாற்றத்தில் 105 தலைமைக் பொலிஸ் கண்காணிப்பாளர்கள் மற்றும் 34 பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளனர். இடமாற்றங்கள் பெப்ரவரி 13 மற்றும் 18 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக அமுலுக்கு வருகின்றன.

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து கணிசமான எண்ணிக்கையிலான பொலிஸ் பொறுப்பதிகாரிகள் சேவைத் தேவைகளின் அடிப்படையில் பொது கடமைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இடமாற்றங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டது. பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (அ)

# மின் துண்டிப்பினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மதிப்பீடு!

கொழும்பு, பெப். 12

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் துண்டிப்பினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-மின்சக்தி அமைச்சும், இலங்கை மின்சார சபையும், மின்சார சபையின் பொறியியலாளர் சங்கமும் மின் வெட்டு தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன. மின் கட்டமைப்பில் ஏற்பட்ட சமநிலையற்ற தன்மை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்னைகள் ஏற்படும் போது அவற்றுக்கு நிரந்த தீர்வை வழங்குவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. குறுகிய கால நடவடிக்கைகள் தற்போது நடைமுறை ப்படுத்தப்பட்டுள்ளன. மின் தடையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் இதுவரை மின்சார சபை எவ்வித அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, பெப். 13

கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி- 56 ரக துப்பாக்கியுடன் காணாமல்போன பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கலபிடமட பகுதியை சேர்ந்த 28 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கியுடன் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த கான்ஸ்டபிள் ஒருவர் டுபாய்க்கு தப்பிச் சென்றமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான கான்ஸ்டபிள் கடந்த 08 ஆம் திகதி மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரையான கடமை நேரத்திற்காக மாலை 5.30 அளவில் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளார்.

எவ்வாறாயினும், அவர் கடமைக்கு சமுகமளிக்கவில்லை என கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# இலங்கை - இந்திய பாதுகாப்பு செயலர்கள் பெங்களூரில் சந்தித்துக் கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 13

இலங்கை பாதுகாப்பு செயலாளர் ஓய்வு நிலை எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவுக்கும் இந்திய பாதுகாப்பு செயலாளர் ஸ்ரீ ராஜேஷ் குமார் சிங்குக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெறுள்ளது.

இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்று வரும் ஏரோ இந்தியா 2025 விமான கண்காட்சியின் ஓர் அங்கமாக நேற்று முன் தினம் இந்த சந்திப்பு நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்தல், கடல் பாதுகாப்பு மற்றும் இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட இருதரப்பு ஆர்வமுள்ள முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.



அத்துடன், அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களைத் திறம்படச் சமாளித்தல், புலனாய்வு தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், கூட்டுப் பயிற்சி களை நடத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்திய மற்றும் இலங்கை பாதுகாப்பு செயலாளர்கள் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாடு கடத்தப்படும் 13 வெளிநாட்டவர்கள்

கொழும்பு, பெப். 13

இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக வந்து, விசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த 12 சீன நாட்டவர்களையும் வியட்நாம் நாட்டவர் ஒருவரையும் உடனடியாக நாடு கடத்துமாறு கொழும்பு பதில் நீதவான் ஹர்ஷன கெக்குனவெல உத்தரவிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறியதாக கண்டறியப்பட்ட குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முதல் விசாரணையிலேயே தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் விஸா ஏற்பாடுகளை பரிசீலித்த பின்னர் நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபர்கள் தலா 50,000 ரூபாய் என்ற கணக்கில் பல்வேறு குற்றச் சாட்டுகளுக்கு அனைவருக்கும் மொத்தமாக 6.5 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டுள் ளது.

அபராதம் செலுத்த தவறினால் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு கட்டாய ஆறு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (அ)

# இறுதிச்சடங்கு நிகழ்வில் தகராறு கத்திக்குத்தில் நான்கு பேர் காயம்!

கொழும்பு, பெப். 12

எகொட உயன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வில் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்துக்கு இலக்காகி பெண் உட்பட நால்வர் காயமடைந்துள்ளதாக எகொட உயன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நால்வரும் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்துகொண்ட இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் தாக்குதலுக்குப் பயன்படுத்திய கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எகொட உயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடனான போரின்போதுகூட நாட்டில் மின் தடை ஏற்படவில்லை!

## குரங்கு சேட்டை வேண்டாம் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 12

**தமிழீழ விடுதலைப் புலிகள் உள்நாட்டு யுத்தத்தின் போது 33,000 மெகாவோல்ட் மின் பிறப்பாக்கியை தீயிட்டு கொழுத்திய போது கூட, நாடளாவிய ரீதியில் மின்துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிக்கையில் குரங்கின் மீது பழி சுமத்தி குரங்கு சேட்டைகள் காண்பிக்க வேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்பட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.**




கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஞாயிறன்று ஏற்பட்ட மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் மீது பழி சுமத்தினார்.

33,000 மெகா வோல்ட் கொண்ட மின் பிறப் பாக்கி விடுதலைப் புலிகளால் தீ வைக்கப்பட்டபோது கூட இவ்வாறு தேசியளவில் மின் சாரம் துண்டிக்கப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? அமைச்சரால் குறிப்பிடப்பட்ட இந்த கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பின்னர் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடு களே இதற்கு காரணம்-என்றார். (அ)

# பல அரச தலைவர்களை சந்தித்தார் அநுரகுமார!



கொழும்பு, பெப். 12

2025 ஆம் ஆண்டு நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன் தினம் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இதன்போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இலங்கை அரசியலில் அரசாங்கத்தின் சிறப்பான வெற்றிக்காக பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையை பல்வகைப்படுத்துவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் கவனம் செலுத்தியதுடன், புதிய மூலோபாய திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடினர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமரிடம் விளக்கமளித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தற்போதைய அரசாங்கம் ஊழலற்ற, வெளிப்படையான பொருளாதார முகாமைத்துவத்தை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார்.

அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நல்லதொரு அடித்தளத்தை அமைக்கும் வகையில் செயற்பட முடியும் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து, பிரித்தானிய முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், பிரித்தானியாவின் நிபுணத்துவம் மற்றும் பல்வேறு துறைகளில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளவதற்கு இலங்கைக்கு காணப்படும் இயலுமையையும் ரொனி பிளேயர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கையில் சுகாதாரம், துறைமுகம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து முன்னாள் பிரித்தானிய பிரதமரிடம் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக முதலீட்டாளர்களை ஈடுபடுத்துமாறும் அழைப்பு விடுத்தார்.

காலநிலை இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல், நல்லாட்சி, விவசாயம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் மற்றும் பயிற்சிகளை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக் காட்டிய ரொனி பிளேயர், இலங்கையின் தற்போதைய ஆட்சிக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

குறிப்பாக, தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்திற்கும் ரொனி பிளேயர் இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் கலந்துகொண்டுள்ளார். (அ)

# இந்த ஆண்டில் வரிகளை குறைக்க சாத்தியமில்லை

கொழும்பு, பெப். 12

இந்த ஆண்டு வரிகளைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியம் இல்லை என்று பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 வீத வரிகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குறிப்பாக, மறைமுக வரிகளைக் குறைப்பது காலப் போக்கில் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் இந்த வருடத்திற்குள் வரி குறைப்பை எதிர்பார்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் படி,15.1 வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து ஒரு குறிப்பிட்ட அளவு வரியை நாம் வசூலிக்க வேண்டும். ஆனால் இந்த செயல்முறையிலிருந்து நாம் மீண்டு, வருவாய் வசூலின் செயல்திறன் அதிகரிக்கும்போது, அந்த மானியங்களை அந்தத் தொழில்களின் தயாரிப்புகளுக்குத் திருப்பித் தரும் சாத்தியம் உள்ளது. அதற்கு அப்பால் சென்றால், விசேடமாக வங்கித் துறை மற்றும் தொழில்களின் தொழிநுட்ப முதலீடுகளுக்கு வரிச் சலுகைகளை வழங்க புதிய அரசாங்கம் எதிர்ப்பார்த்துள்ளது. எனவே 17 ஆம் திகதி பட்ஜெட்டில் இதையெல்லாம் நாம் காணலாம். பட்ஜெட் ஊடாக, குறிப்பாக தொழில்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் ஆதரவை வழங்க அரசாங்கம் எதிர்ப்பார்த்துள்ளது.

அடுத்த சில ஆண்டு களில் தொழில்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கைத்தொழில்களுக்கான பொருட்களை இறக்குமதி செய்யும் போது புதிய வரிக் கொள்கையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# லிட்ரோ விலை மாற்றமில்லை!

கொழும்பு, பெப். 12

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், நாட்டில் லிட்ரோ எரிவாயு விலையை அதிகரிக்கப்போவ தில்லை என தீர்மானித்துள்ள தாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார்.

கையிருப்புக்கள் முறையாக பேணப்படுவதால் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் செப்ரெம்பர், ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களிலும் லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றங்கள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் சில்லறை விலை 3,690 ரூபாவாகவும், 5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகவும், 2.3 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண் டரின் விலை 694 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# வானிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய விவசாயத்துக்கான கூட்டுத்திட்டம் அறிமுகம்

கொழும்பு, பெப். 12

இலங்கையின் விவசாயத் துறை முகங்கொடுத்துவரும் அவசர சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு அரசாங்கம், தனியார்துறை, சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைப்பதுடன், சவால்களைக் களைவதற்கான வழிவகைகளைக் கண்டறியும் நோக்கில் “வானிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய விவசாயத்துக்கான கூட்டுத்திட்டம்“ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வானிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் விவசாயத்துக்கான கூட்டுத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் விவசாயத்துறை முகங்கொடுத்துவரும் அவசர சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு அரசாங்கம், தனியார்துறை, சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் சுற்றாடல் அமைச்சும், ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த அரச - தனியார் மக்கள் மன்றம் கொழும்பில் நடைபெற்றது

இதன்போது வானிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ளக்கூடியவாறான விவசாய நடவடிக்கைகளில் தனியார் துறையினர் ஈடுபடுவதில் காணப்படும் தடைகளை உரியவாறு கையாள்வது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக கொள்கை, நடைமுறை மற்றும் நிதி சீர்திருத்தங்கள், டிஜிற்றல் புத்தாக்கங்களுடன் இணைந்ததாக மீளெழுச்சித்தன்மையை மேம்படுத்தல் என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட சுற்றாடல் அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.டி. எஸ்.ஜயதுங்க, “தற்காலத்தில் நிலவும் மிகமுக்கிய சவால்களில் ஒன்றைக் கையாள்வதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப் படக்கூடிய கூட்டு நடவடிக்கையாக இது அமைந்திருக்கின்றது. அரச, தனியார் மற்றும் சமூகத்துறைகளின் நிபுணத்துவம் மற்றும் வளங்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக விவசாயத்தை வலுப்படுத்தவும், புத்தாக்க சிந்தனையு டன்கூடிய தீர்வுகளை வழங்கவும் முடியும்“ என நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# மத்திய வங்கி எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 12

இலங்கை மத்திய வங்கியின் பெயரைப் பயன்படுத்தி சமூக வலைத் தளங்களில் போலியான விளம்பரங்கள் வெளியிடப் பட்டு வருவதாகவும் எனவே பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தாம் ” மத்திய வங்கியில் காணப்படும் தொழில்வாய்ப்புக்கள் எதையும் மூன்றாம் தரப்பு தளங்களில் விளம்பரப்படுத்துவதில்லை எனவும்,

தமது இணையத் தளத்தின் தொழிவாய்ப்புப் பிரிவின் கீழும் மத்திய வங்கி யின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களிலும் மாத்திரமே இது தொடர்பான தகவல்களை வெளியிடுவதாகவும் அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கி சார்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வேறு வலைத்தளங்களுக்கோ அல்லது தனிநபர்களுக்கோ அதிகாரமளிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் ாவவிள:ஃஃறறற. உடிளட.பழஎ.டமஃநெஃ உயசநநசள என்ற உத்தியோக பூர்வ இலங்கை மத்திய வங்கியின் தொழில்வாய்ப்பு பக்கத்தினூடாக பரீட்சித்து விண்ணப்பிக்குமாறும் அவதானத்துடன் செயற்படுமாறும் இலங்கை மத்திய வங்கி பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும்

## அஷ்ரப் தாஹிர் எம். பி. கோரிக்கை



கல்முனை, பெப்.13

**அம்பாறை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் கல்வி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, சமூக சேவை மற்றும் பல்வேறுபட்ட பிரச்னைகள் தொடர்பில் முன்மொழிவுகளை செய்து, பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரமவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அஷ்ரப் தாஹிர் எம். பி. மேலும் தெரிவிக்கையில்,நிந்தவூர் பிரதேச கலாசார மண்டப நிர்மாணம், வீதி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, பாலம் அமைத்தல் போன்றவையும், சாய்ந்தமருது பிரதேச மையவாடி, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், மாவடிப்பள்ளி பாடசாலை அபிவிருத்தி, விவசாயிகளின் பிரச்னைகள்,

சம்மாந்துறை பேருந்து தரிப்பிடத்தை மீண் டும் செயல்படுத்தல், அட்டாளைச்சேனை வீதிகள், வடிகான்கள் அமைத்தல், நாவிதன்வெளி மையவாடி, பொது விளையாட்டு மைதான புனர்நிர்மாணம் போன்ற பல முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட பிரதி அமைச்சர்கள்,

பாராளு மன்ற உறுப்பினர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள், உள் ளூராட்சி சபைகளின் செயலா ளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (எ)

# புனித ரமழான் காலத்தில் இறுக்கமான கண்காணிப்பு

கல்முனை, பெப்.13

புனித ரமழான் காலத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் விசேட உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.


இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி முஹம்மட் பௌசாட், சாய்ந்தமருது மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனுடன் கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு மற்றும் சாய்ந்தமருது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, நோன்பு காலத்தில் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் உடனடி உணவுகள், கடைகளில் விற்பனை செய்யப்படும் கஞ்சி வகைகள் போன்றவற்றை பரிசோதனை செய்வதுடன் இவ் உணவக உரிமையாளர்களுக்கு வழிகாட்டுதல் நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக நோன்பு காலங்களில் சிற்றுணவு வகைகளை விற்பனை செய்ய விரும்பும் வியாபாரிகள் தாங்கள் இவ்வாறு விற்பனையில் ஈடுபட உள்ளதாக உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இவ் வழிகாட்டல் வழங்கப்பட்ட பின்னர் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் உண வுப் பாதுகாப்பு விதிமுறை களை மீறிய நிலையில் உணவு களை சமைத்து விற்பனை செய்யும் உணவக உரிமையா ளர்களுக்கு எதிராக சட்டரீதி யாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டது. (எ)

# தீ வைப்பு சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணை!



கல்முனை, பெப்.13

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சந்தான்கேணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தீ வைப்பு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட குழு ஆரம்பித்துள்ளது.

லெஜன்ஸ் விளையாட்டு கழகத்துக்கு சொந்தமான மைதான ஆடுகள விரிப்பு கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாத நபர்களால் எரியூட்டப்பட்டுள்ளதாக லெஜன்ஸ் கழகம் சார்பில் அதன் செயலாளரால் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கமைய கல்முனை பொலிஸ் நிலைய பொலிஸாரும் அம்பாறையில் இருந்து வந்த தடயவியல் பொலிஸ் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். எரியூட்டப்பட்ட மைதான ஆடுகள விரிப்பின் பெறுமதி 120000 ரூபாயாகும்.

மேலும், குறித்த சம்பவம் இடம்பெற்ற போது மைதானத்தில் கடமையாற்றும் காவலாளி கடமையில் இல்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதே போன்ற சம்பவம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பும் இடம்பெற்றுள்ளது.(எ-01)

# வீட்டில் கஞ்சா பதுக்கியவருக்கு 7 நாட்கள் தடுப்புக்காவல்


கல்முனை, பெப்.13

18 கிலோ 169 கிராம் கேர ளக் கஞ்சாவை வீட்டில் உள்ள கட்டிலின் கீழ் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த சந்தேக நபரை 07 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இதன்போது, கல்முனை நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை 07 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ-01)

# முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



நற்பிட்டிமுனை, பெப்.13

அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனை அல் அக்ஸா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாலர் பாடசாலையின் அதிபர் திருமதி இஸ்மாயில் ரியாஸா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ. எம். ஹலீம், பிரதம விருந்தினராகவும், அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி ரெஜினா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (எ)

# பல்கலை. சிற்றுண்டி சாலைக்கு ரூ. 20000 தண்டப் பணம் விதிப்பு

கல்முனை, பெப்.13

சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கத் தவறிய தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலைக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத் தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன் போது சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கத் தவறிய குறித்த சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எதிராக சுகாதார வைத்திய அதிகாரிகளால் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய வேளை 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டது. (எ)

# சுகாதார அபிவிருத்தி தொடர்பில் முன்பள்ளியில் அறிவூட்டல் நிகழ்வு

சம்மாந்துறை, பெப்.13

சம்மாந்துறை அல் வசாத் பாலர் பாடசாலையில் முன்பள்ளி சுகாதார அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமூக வைத்திய நிபுணர் ஹில்மி மொஹமட் வளவாளராக பங்கேற்றார். "எவ்வாறு ஒரு முன்பள்ளியை சுகாதார அபிவிருத்தி நோக்கி நகர்த்துவது" என்று அவர் விளக்கினார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் பைலான் நளீம், பொதுச் சுகாதார பரிசோதகர் எம். தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சுகாதார விடயங்களை தெளிவுபடுத்தினர்.

அல் வசாத் பாலர் பாடசாலை நிர்வாகிகளையும், பாலர் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களையும் உள்ளடக்கியதாக நடைபெற்ற இந்த சுகாதார அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல் நிகழ்வானது,

முன்பள்ளியை 2025 இற்கான சிறந்த சுகாதார மேம்பாட்டு அமைப்பு முன்பள்ளியாக மாற்றுவதற்கான முன்னோடி நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளின் தாக்குதலால் கொங்கோவில் 55 பேர் உயிரிழப்பு

கின்ஷாசா, பெப்.13

**கொங்கோவில் பயங்கரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 55 பேர் உயிரிழந்தனர். இதனால், அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.**

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் உள்நாட்டுப்போர் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதேவேளை, கொங்கோவில் பல்வேறு பயங்கரவாத குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. பயங்கரவாத குழுக்கள் அவ்வப்போது பொதுமக்கள் மீதும் படையினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன. அந்த நாட்டில் பல்வேறு கிளர்ச்சி குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

நிலம், சுரங்களை கைப்பற்றும் நோக்கில் இந்த கிளர்ச்சி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கொங்கோவின் இடுரி மாகாணம் பஹிமா பட்ஜிரா பகுதியில் உள்ள கிராமங்களில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் மாலை திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 55 பேர் உயிரிழந்தனர்.

மேலும், கிராமங்களில் உள்ள வீடுகளை பயங்கரவாதிகள் தீ வைத்து எரித்து சென்றனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. (ஏ)

# 3 படகுகளை கடத்திய கடற்கொள்ளையர்கள்

## சோமாலியாவில் தொடரும் அட்டூழியம்

மொகாதிசு, பெப்.13

சோமாலியாவில் மீன்பிடிப் படகுகளை கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றனர்.

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் 2011ஆம் ஆண்டு முதல் கடற்கொள்ளையர்கள் அட்டூழியம் செய்து வருகின்றனர். இதனால், சர்வதேச கடற்படையின் ரோந்து பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்குப் பிறகு கடற்கொள்ளையர்களின் அட்டூழியம் மீண்டும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்குள்ள ஈல் கடற்பகுதியில் ஏமனுக்குச் சொந்தமான 3 மீன்பிடிப் படகுகள் சென்று கொண்டிருந்தன. அவற்றை குறிவைத்து கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தினர். எனவே, அதிலிருந்த மீனவர்கள் வேறொரு படகு மூலம் தப்பி கரையை அடைந்தனர். அதேவேளை, 3 படகுகளையும் கொள்ளையர்கள் கடத்திச் சென்றனர். இது குறித்து ஐரோப்பிய கடற்படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஏ)

# “ஆம் ஆத்மியும் காங்கிரஸும் அழிக்க போராடின”

புதுடில்லி, பெப்.13

ஆம் ஆத்மியும் காங்கிரஸும் ஒன்றையொன்று அழிக்கப் போராடின என்று உத்தவ் சிவசேனா கட்சி கடுமையாக சாடியுள்ளது.

இந்தியா கூட்டணிக் கட்சிகளான ஆம் ஆத்மி, காங்கிரஸ் இடையிலான பிளவு, டில்லி தேர்தலில் பா. ஜ. கவின் மகத்தான வெற்றிக்கு வழிவகுத்தது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

டில்லி சட்டப்பேரவை தேர்தலில் 48 இடங்களை கைப்பறிய பா. ஜ. க., அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியை ஆட்சியிலிருந்து அகற்றியது. காங்கிரஸ் கட்சியும் தொடர்ந்து மோசமான தோல்வியை தழுவியது.

இது குறித்து சிவசேனா (உத்தவ்) கட்சி தனது “சாம்னா” நாளிதழில் தெரிவித்துள்ளதாவது, டில்லியில், ஆம் ஆத்மியும் காங்கிரஸும் ஒன்றையொன்று அழிக்கப் போராடின, இது பிரதமர் மோடி, அமைச்சர் அமித் ஷாவுக்கு விடயங்களை எளிதாக்கியது. இது தொடர்ந் தால், ஏன் கூட்டணிகளை உருவாக்க வேண்டும்?- என்று சாடியுள்ளது. (ஏ)

# குடியேறிகளை நாடு கடத்தும் அமெரிக்காவுக்கு கண்டனம்


ரோம், பெப்.13

சட்டவிரோத குடியேறிகளை நாடு கடத்தும் ட்ரம்ப் நிர்வாகத்துக்கு போப் ஆண்டவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் எல்லை வழியே, அண்டை நாடுகளான மெக்சிக்கோ, கனடா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான முறையில் புலம்பெயர்ந்து அந்த நாட்டுக்குள் செல்கின்றனர். இந்த நிலையில், இது போன்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக, ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன்படி, அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இந்தியா, கனடா, மெக்சிக்கோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை கண்டறிந்து, அவர்களை அவர்களது சொந்த நாட்டுக்கு அமெரிக்க அரசு அனுப்பி வருகிறது.

இந்த நடவடிக்கைக்கு கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர்



பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையானது புலம்பெயர்ந்தோரின் கண்ணியத்தை பாதிக்கிறது என்றும், இது மோசமாக முடிவடையும் என்றும் போப் ஆண்டவர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா வில் உள்ள கத்தோலிக்க மதகுருமார்களுக்கு எழுதிய கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர், வறுமை மற்றும் காலநிலை பேரழிவுகளில் இருந்து தப்பிச்செல்பவர்களை, பிற நாடுகள் வரவேற்று, பாதுகாக்க வேண்டும் என்றும் போப் ஆண்டவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கங்கள் தங்கள் திறன் வரம்புக்கு ஏற்ற வாறு இதனைச் செய்ய வேண் டும் என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார். (ஏ)

# அமீரக ஜனாதிபதியுடன் பாக். பிரதமர் சந்திப்பு



அபுதாபி, பெப்.13

அமீரக ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் பிரதமர் செபாஸ் ஷெரீப் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

டுபாயில் ஆண்டுதோறும் உலக அரசு உச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு அரசுகளுக்கான புதுமையான தீர்வுகள் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

அந்த வரிசையில் நடப்பு ஆண்டுக்கான உலக அரசு உச்சி மாநாடு டுபாய் எதிர்கால அருங்காட்சியக வளாகத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த உச்சி மாநாட்டின் முதல் நாளில் உரையாற்ற பாகிஸ்தான் பிரதமர் செபாஸ் ஷெரீப் அபுதாபிக்கு வந்தார். அப்போது கஸர் அல் சாத்தி அரண்மனை வளாகத்தில் அமீரக ஜனாதிபதி ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யானை சந்தித்து பேசினார்.

இதில் இருதரப்பில் பல்வேறு முக்கிய துறைகளில் ஒத்துழைப்பு பெறுவதற்கான பேச்சுக்கள் நடந்தன. தொடர்ந்து மத்திய கிழக்கு பிரதேசத்தின் முன்னேற்றங்கள் மற்றும் சர்வதேச பிரச்னைகள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். (ஏ)

# பாகிஸ்தானை ஆள்வது இராணுவ தளபதிதான்

## குழந்தைக்கு கூட தெரியும் - இம்ரான் கான்

இஸ்லாமாபாத், பெப்.13

பாகிஸ்தானை ஆள்வது இராணுவத் தளபதி ஆசிம் முனீர் என்பது குழந்தைக்கு கூடத் தெரியும் என்று முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான் கான், இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறார்.

இந்த நிலையில், அடக்குமுறை மற்றும் பாசி சத்தின் பிடியில் பாகிஸ்தான் சிக்கியுள்ளது என்று இம்ரான் கான் விமர்சித்துள்ளார். இது தொடர்பில் அவரது “எக்ஸ்“ தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

“பாகிஸ்தான் இராணுவத்தின் நம்பகத்தன்மை அழிக்கப்படுகிறது என்பதை இராணுவப் பிரிவு செய்தித் தொடர்பாளரிடம் சொல்ல விரும்புகிறேன்.



அரசியலில் தலையிட மாட்டோம் என இராணுவம் கூறுகிறது. ஆனால், பாகிஸ்தானை ஆள்வது இராணுவத் தளபதி ஆசிம் முனீர் என்பது குழந்தைக்குக் கூட தெரியும்.

கவுன்சிலர் தேர்தலில் கூட போட்டியிடாத மொஹ்சின் நக்வி(உள்துறை மந்திரி) போன்ற ஒரு மனிதரிடம் நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்போது கிரிக்கெட் முதல் நாட்டின் உள்துறை மற்றும் வெளி விவகாரங்கள்துறை வரை அனைத்தையும் அவர் கட்டுப்படுத்துகிறார். அடக்குமுறை மற்றும் பாசிசத்தின் பிடியில் பாகிஸ்தான் சிக்கியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் அதன் நம்பகத்தன்மையை இழந்துவிட்டது. பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர். தெஹ்ரீக்-ஈ-இன்சாப் கட்சியின் தலைவர்களை கைது செய்வதற்கும், தேர்தல் மோசடிகளை மறைப்பதற்கும் மட்டுமே அரசு அமைப்பு வேலை செய்கிறது. மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகமாகிவிட்டது.

ஜனநாயகம் எங்கு வளர்கிறதோ, அங்கு முன்னேற்றம் இருக்கும். கிழக்கு ஜேர்மனி சர்வாதிகார ஆட்சியின் கீழ் இருந்தது. மேற்கு ஜேர்மனி ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டது.

இதனால், 50 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கு ஜேர்மனி எவ்வாறு செழிப்படைந்தது என்பதை உலகம் கண்டது”- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

# சிங்கப்பூரில் பயங்கரவாத தாக்குதல் நடக்க வாய்ப்பு

## அமைச்சர் சண்முகம் எச்சரிக்கை

சிங்கப்பூர்சிற்றி, பெப்.13

சிங்கப்பூரில் பயங்கரவாதத் தாக்குதல் எப்போது வேண்டுமானாலும் அரங்கேற வாய்ப்புள்ளது என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் கூறுகையில், “சிங்கப்பூரில் பயங்கரவாதத்தால் ஈர்க்கப்பட்ட மூவர் மீது உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவர்களில் ஒருவர் 18 வயது சிங்கப்பூர் இளைஞர். சிங்கப்பூரில் வலதுசாரித் தீவிரவாதச் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்றாவது இளைஞர் அவர். உலகளவில் பயங்கரவாத சித்தாந்தத்தால் ஈர்க்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படும் அச்சுறுத்தல்களும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சிங்கப்பூரில் பயங்கரவாத தாக்குதல் எப்போது வேண்டுமானாலும் அரங்கேற வாய்ப்புள்ளது. எனவே, இங்கு வசிக்கும் மக்கள் அதை எதிர்கொள்ள தங்களை மனதளவில் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்”- என்றார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிரான போட்டியில் சரித் அசலங்க அதிரடி சதம்!

கொழும்பு, பெப்.13

இலங்கை - அவுஸ்திரேலியா இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இலங்கை அணியின் தலைவர் சரித் அசலங்க அதிரடியாக விளையாடி சதம் அடித்து அசத்தினார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. அடுத்து இவ்விரு அணிகள் இடையே 2 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடத்தப்படுகிறது. இதன் முதலாவது ஒரு நாள் போட்டி கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்கு தங்களை சிறந்த முறையில் தயார்படுத்துவதற்கு இந்தத் தொடரை அவுஸ்திரேலியா சரியாக பயன்படுத்திக் கொள்ள முயற்சித்துள்ளது.

அணித் தலைவர் ஸ்டீவன் சுமித், ட்ராவிஸ் ஹெட், மெக்ஸ்வெல், லபுஸ்சேன், அலெக்ஸ் ஹெரி, மேட் ஷார்ட், சீன் அப்போட், நாதன் எலிஸ், மிட்செல் ஸ்டார்க் என்று அவுஸ்திரேலிய அணியில் நட்சத்திர வீரர்கள் விளையாடினர்.

இலங்கை அணி இந்த முறை சம்பியன்ஸ் போட்டிக்கு தகுதி பெறவில்லை. இருப்பினும் டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்கு பழிதீர்க்க தீவிரம் காட்டு



வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அணித் தலைவர் சரித் அசலங்கவை தவிர ஏனைய வீரர்கள் சோபிக்கவில்லை. நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, சகல விக்கெட்களையும் இழந்து 214 ஓட்டங்கள் சேர்த்தது. அதிரடியாக விளையாடிய சரித் அசலங்க 5 சிக்ஸர்களுடன் 127 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார்.

ஒரு நாள் கிரிக்கெட்டில் இவ்விரு அணிகள் இதுவரை 103 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் 64இல் அவுஸ்திரேலியாவும், 35இல் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. 4 ஆட்டத்தில் முடிவில்லை. (எ)

## ஜோமல் வாரிக்கனுக்கு ஐ.சி.சி. சிறந்த வீரர் விருது




டுபாய், பெப்.13

ஐ. சி. சியின் ஜனவரி மாத சிறந்த வீரர் விருதை மேற்கு இந்திய தீவுகள் அணியின் வீரர் ஜோமல் வாரிக்கன் வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது. இதன்படி, ஜனவரி மாதத்துக்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட பரிந்துரை பெயர் பட்டியலை சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது.

இதில் சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில் மேற்கு இந்திய தீவுகளின் ஜோமல் வாரிக்கன், பாகிஸ்தானின் நோமன் அலி மற்றும் இந்தியாவின் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அதேபோன்று, சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பட்டியலில் கரிஷ்மா ராம்ஹராக் (மேற்கு இந்திய தீவுகள்), பெத் மூனி (அவுஸ்திரேலியா) மற்றும் கோங்கடி திரிஷா (இந்தியா) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இதன்படி, ஐ.சி.சியின் ஜனவரி மாத சிறந்த வீரர் விருதை மேற்கு இந்திய தீவுகளின் ஜோமல் வாரிக்கனும், சிறந்த வீராங்கனை விருதை அவுஸ்திரேலியாவின் பெத் மூனியும் வென்றுள்ளனர். (எ)

## ஜெய்ஸ்வாலுக்கு பதிலாக வருண் சக்கரவர்த்தி சேர்ப்பு

மும்பை, பெப்.13

இறுதிக்கட்ட வீரர்கள் பட்டியலில் ஜெய்ஸ்வாலுக்கு பதிலாக வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்படுவதாக பி. சி. சி. ஐ. அறிவித்துள்ளது.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள அனைத்து அணிகளும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டன. இருப்பினும் அந்த அணியில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால் நேற்று முன்தினம் 11ஆம் திகதிக்குள் மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்று ஐ.சி.சி. கெடு விதித்திருக்கிறது. இதன் காரணமாக அனைத்து கிரிக்கெட் சபைகளும் தங்களது அணியில் காயமடைந்துள்ள வீரர்களுக்கு பதிலாக மாற்று வீரர்களை தெரிவு செய்யும் முயற்சியில் ஈடு பட் டன.

இந்த நிலையில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான ரி - 20 தொடரில் 14 விக்கெட்களை வீழ்த்தி அசத்திய நிலையில், இறுதிக்கட்ட வீரர்கள் பட்டியலில் ஜெய்ஸ்வாலுக்கு பதிலாக வருண் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பி. சி. சி. ஐ. அறிவித்துள்ளது. (எ)



## அவுஸ்திரேலிய அணியின் மிட்சல் ஸ்டார்க் விலகல்


சிட்னி, பெப்.13

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் இருந்து அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர் மிட்சல் ஸ்டார்க் விலகியுள்ளார்.

இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கும் ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதில் இந்திய அணிக்குரிய அனைத்து ஆட்டங்கள் மற்றும் முதலாவது அரையிறுதியும் டுபாயில் நடைபெறவுள்ளன. மற்ற ஆட்டங்கள் அனைத்தும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன. இறுதிப்போட்டி நடைபெறும் இடம் இந்திய அணி தகுதி பெறுவதை பொறுத்து முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி பட் கம்மின்ஸ் தலைமையில் முன்னர் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் கணுக்கால் காயம் காரணமாக கம்மின்ஸ் பங்கேற்பதில் சிக்கல் நிலவியது. அதேபோன்று மற்றொரு முன்னணி வீரரான ஜோஷ் ஹெசில்வுட்டும் விலா பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக களமிறங்குவது கடினம் என்று கூறப்பட்டது. இந்தச் சூழலில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து கம்மின்ஸ், ஹேசில்வுட் ஆகிய இருவரும் விலகினர். மேலும் கேமரூன் கிரீன், மிட்செல் மார்ஷ் மற்றும் மார்க்கஸ் ஸ்ரொயினிஸ் ஆகியோரும் இந்தத் தொடரில் விளையாடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனிப்பட்ட காரணங்களுக்காக சம்பியன்ஸ் கிண்ண தொடரிலிருந்து அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர் மிட்சல் ஸ்டார்க் விலகியுள்ளார். இது அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. (எ)



## இந்திய அணியில் ஹர்சித் ராணா

மும்பை, பெப்.13

பும்ராவுக்கு பதிலாக மற்றொரு முன்னணி வீரர் ஹர்சித் ராணா இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார்.

பெப்ரவரி 19ஆம் திகதி கராச்சியில் தொடங்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து அணியை சந்திக்கிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா இடம் பிடித்திருந்தாலும், அவர் இந்த தொடரில் விளையாடுவாரா? என்பதில் சந்தேகம் நிலவியது. அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 5ஆவது போட்டியின்போது



முதுகு பகுதியில் பும்ரா காயமடைந்தார். இதனால் இங்கிலாந்து துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த அவர் நீக்கப்பட்டார்.

இந்தச் சூழலில் அவர் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடுவாரா? என்பதில் குழப்பம் நீடித்து வந்தது. இந்த நிலையில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து காயம் காரணமாக பும்ரா விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பும்ராவுக்கு பதிலாக ஹர்சித் ராணா இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி - 20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரிலும் பும்ரா விளையாடாமல் இருந்த நிலையில், ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான 15 பேர் கொண்ட அணியில் இருந்தும் பும்ரா விலகியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஐ. சி. சி. ரி - 20 உலகக் கிண்ணத் தொடரை பும்ரா தவறவிட்டார். இந்த நிலையில், முதுகு காயத்தால் இரண்டாவது ஐ. சி. சி. போட்டி தொடரையும் பும்ரா தவறவிட்டுள்ளார். (எ)

# ரோஹித் சர்மா ஏமாற்றம்

அகமதாபாத், பெப்.13

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் நாக்பூர் மற்றும் கட்டாக்கில் நடந்த முதல் இரு ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

இந்த நிலையில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் தொடக்க வீரர் ரோஹித் சர்மா, ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். கடந்த போட்டியில் இவர் 127 ஓட்டங்கள் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்வெட்டு...

குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் தடையை மீட்டெடுக்கும் வேளையில், நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட பிரச்னையின் விளைவாக திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களில் நாடளாவிய ரீதியில் சுழற்சி மின்வெட்டை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, பிற்பகல் 03.30 மணி தொடக்கம் இரவு 09.30 மணி வரையான காலப் பகுதியில் சுழற்சி முறையில் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பகுதிகளிலும் 90 நிமிட மின்வெட்டை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய உற்பத்தித் திறனுடன் பௌர்ணமி தின குறைந்த தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்பதால் நேற்று மின்வெட்டு இடம்பெறாது என இலங்கை மின்சார சபை உறுதிபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சைபர் தாக்குத...

மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அங்கு நடைபெற்று வரும் சர்வதேச அரச உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது உலகில் எந்த நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பான அக்கரையும் அதன் மீதான தாக்கமும் எமது நாட்டு மக்களுக்கு என்றும் இருக்கும் எனவும், எமது மக்கள் பண்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதோடு, மாற்றத்தை விரும்பும் ஒரு சமூக அமைப்பாகவும் காணப்படுகிறார்கள் எனவும் உலகிலேயே அதிக கண் தானம் செய்யும் நாடு என்ன என்று இணையத்தில் நீங்கள் தேடினால், இலங்கையின் பெயர்தான் பதிலாக வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடுகளுக்கிடையிலும், பிராந்தியங்களுக்கு இடையிலும் உலகளாவிய ரீதியாகவும் தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், இந்த சவால்களுக்கு ஒன்றிணைந்து முகம் கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாகும் எனவும், வறுமையான நாடுகளில் 60 வீதமான நாடுகள் இன்று கடன் சுமைக்கு உள்ளாகியுள்ளன.

மேலும், சர்வதேச நாடுகளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களுடன், வளர்ந்துவரும் உலகுக்கு ஏற்ற வகையில், முதலீடுகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் இலஞ்ச - ஊழல் இல்லாத ஓர் ஆட்சியை நோக்கி தாம் பயணித்துக் கொண்டிருப்பதாகவும், எமது நாட்டுக்கு சுற்றுலா மேற்கொண்டால், எமது நாட்டை சூழவுள்ள கடலை பார்த்து நீங்கள் ஆச்சரியப்படக்கூடும் எனவும் அநுர கூறினார்.

அத்துடன், டிஜிற்றல் புரட்சியை ஏற்படுத்தத் தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், துப்பாக்கித் தோட்டா மற்றும் விமானத்தில் வெடிக்கும் வெடிகுண்டைவிடவும் சமகாலத்தில் சைபர் தாக்குதலால் அதிக அழிவுகள் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன எனவும் ஆயுதம் தாங்கிய யுத்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்க சர்வதேச ரீதியாக சட்ட திட்டங்கள் காணப்பட்டாலும், சைபர் யுத்தங்களிலிருந்து மக்களை காக்க எந்தவொரு சட்டமும் கிடையாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் இதனால், சைபர் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள பலம் வாய்ந்த சட்டக்கட்டமைப்பு ஒன்று அவசியமாகும் எனவும் ஒரு வருடத்திற்கு மேலாக நீடித்த வைரஸ் தாக்குதலால், வல்லரசு நாடுகள் முதல் வறுமையான நாடுகள்வரை பாதிக்கப்பட்டதை நாம் மறந்துவிடக்கூடாது எனவும், இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் பல நோய்கள் பரவ ஆரம்பித்துள்ளன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

## தையிட்டி போராட்...

சிறீரங்கேஸ்வரன், வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஐங்கரன், வேலணை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அனுஷா உள்ளிட்ட பலர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின்போது "சட்ட விரோத விகாரையை அகற்று", "மக்களின் காணிகளை மக்களிடமே வழங்கு", "இனவழிப்பு இராணுவமே வெளியேறு", "ஆக்கிரமிப்பு இராணுவமே வெளியேறு", எனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. எனினும், போராட்டத்தில் பங்கேற்ற ஈ. பி. டி. பியினர் இராணுவத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பாமல் அமைதி காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு...

அலுவலர்களை ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கைச் சேர்ந்த பல தரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டங்கள் அமையும்.

மக்களுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்த பல விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளன. வட பகுதி மக்கள் முதல் தடவையாக அரசாங்கத்துக்கு தேர்தலில் பெருமளவு ஆதரவு வழங்கியுள்ளனர்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம்- என்றார்.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் யாழ்ப்பாணப் பயணம் தொடர்பிலும் அவர் இதன்போது வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் குறிப்பாக மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்ற உறுதிமொழி தொடர்பிலும் ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி பிரஸ்தாபித்தார். (அ)

## இனவாதத்தை...

உறுப்பினர் அஜித் ரணசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்

பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளித்தமையை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் சம்பளம் பெறும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் உள்ளிட்டவர்கள் சட்டவரோத விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விகாரையாகும். அரச மரக்கிளை எம்முடைய நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சமயத்தில் சில தினங்கள் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பகுதியிலேயே வழிபாடுகள் நடத்தப்பட்டு பின்னராகவே அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையை இடித்துத் தகர்ப்பதற்கு ஒன்றிணையுமாறான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையை இடித்துத் தகர்ப்பதற்கு ஒன்றிணையுமாறான துண்டுப்பிரசுரங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை எனக் கூறியுள்ளார். முதுகெலும்பு இருப்பின் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

## தையிட்டி விகாரை...

செல்லுபடியாகாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு ஒரு சட்டம், ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு சட்டம் என்ற பாரபட்சங்கள் புதிய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் நடைபெறுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தையிட்டி விகாரை தொடர்பில் அவர் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உண்மையில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான தனியார் காணியில் கோவிலோ தேவாலயமோ பள்ளிவாசலோ அமைப்பதற்கு இந்த அரசாங்கம் கடைசி வரை அனுமதிக்காது. அவ்வாறு தவறுதலாக அமைத்திருந்தால், உடனடியாக இந்த அரசாங்கம் உடைத்து அழித்து விட்டிருக்கும். இதனை சட்ட ஆட்சி என்று கூறுவர்.

அந்த சட்ட ஆட்சி தையிட்டி விகாரை விடயத்தில் செல்லுபடியாகாது. அதே போன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு ஒரு சட்டம், ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு சட்டம் என்ற பாரபட்சங்கள் புதிய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் நடைபெறுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி சார்பாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இவற்றை கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். இதுதான் கூட்டுப் பொறுப்புக் கொள்கை என்று தேசிய மக்கள் சக்தி கற்பிக்கிறது.

வடக்கு, கிழக்கு காணி அபகரிப்புகளைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு வடக்கு, கிழக்கு மக்கள் அங்கிருந்து தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்க மாட்டார்கள். வடக்கில் தமிழ் அரசுக் கட்சியினர் வேட்பாளர் தெரிவில் விட்ட தவறுதான் அங்கு தேசிய மக்கள் சக்தியில் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணமாகும். இல்லாவிட்டால் அந்த ஆசனங்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு உரியதாக அமைந்திருக்கும்.

இந்த நிலையில், வட பகுதித் தமிழ் மக்கள் உணர்ந்திருப்பார்கள். ஆளும் கட்சியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கு எதிரான எதனையும் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளது.

தையிட்டி விகாரை, வெடுக்குநாறி மலை, மயிலத்தமடு மாதவனை, கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் போன்ற விடயங்களையும் தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளதை அறிய முடிகின்றது.

எனவே, தமிழ்த் தேசியத்தை பலப்படுத்துவதன் மூலமாகவே தமிழர்களின் பிரச்னைகளை தடுக்க முடியும் அல்லது குறைக்க முடியும். இதனைத் தமிழ் மக்கள் உணரும் சந்தர்ப்பத்தை தையிட்டி விகாரை உணர்த்துகிறது-என்றுள்ளது. (அ)

## முன்னாள் எம். பி...

கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்த நூற்றாண்...

சுட்டிக்காட்டினார்.

நூற்றாண்டில் இடம்பெற்ற மிக மோசமான மோசடி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் இடம்பெற்றுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஒரு தொகை கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைக்கும் உட்படுத்தாது விடுவிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கலன்களில் காணப்பட்ட பொருட்களின் அடிப்படையில் இந்த மோசடி மதிப்பீடு செய்யப்படமுடியாத பாரிய மோசடியாக இருக்கக் கூடும்.

நீரை சுத்தகரிப்பதற்கு பயன்படுத்தும் இரசாயனத்தில் புற்று நோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனம் காணப்பட்டதாக அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் டி. வீ. சானக்க குற்றம் சுமத்தியிருந்தார் எனவும் அவ்வாறான பொருட்கள் எவ்வாறு பரிசோதனையின்றி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன என சாகர காரியவசம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த கொள்கலன்களின் உரிமையாளர்கள் யார் என்பது பற்றிய விவரங்களை கண்டுபிடிக்க இந்த அரசாங்கத்தினால் முடியாது போயுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## எமது கடல்...

நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகின்றது.

எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன் பிடிக்கவேண்டாம் என தமிழக மீனவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்கு கிடையாது. எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களை பிடித்துக்கொண்டு செல்லும் வழியில் எங்களை தொப்புள்கொடி உறவுகள் எனக்கூறுவதில் பயன் இல்லை.

தமிழக மீனவர்கள் மீதோ, தமிழக தலைவர்கள் மீதோ எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒரு சில மீனவர்கள் தான் ட்ரோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடை செய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றனர். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறாவிட்டால் எவரையும் கைது செய்ய வேண்டியது தேவைப்பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாம் என போராடும் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் எல்லைத்தாண்டாவிட்டால் எவ்வித பிரச்னையும் எழாது-என்றார்.

## தையிட்டி திஸ்ஸ...

"பௌத்தம் உன் மதம் வழிபடு தையிட்டி என் மண் வழிவிடு", "சட்ட விரோத விகாரை கட்டுமானத்தை உடனடியாக அகற்று", "கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை நிறுத்து" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு அருகில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (அ)

## சிறுவர்...

துஷ்பிரயோகம் இடம்பெற்ற தினத்திலிருந்து வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு சுமார் 05 வருடங்கள் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

காலம் தாழ்த்தி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு சாட்சி வழங்கப்படும் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களினால் சம்பவம் தொடர்பான முழுமையான தகவல்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இடம்பெறும்போது குற்றவாளிகள் தப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக நீதியமைச்சர் கூறினார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபரே வழக்கு தாக்கல் செய்வதாகவும் அவரது பணிக்குழாமில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் தனியான பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்கு விசாரணைகளை விரைவில் முடிவுறுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார நம்பிக்கை வெளியிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அர்ச்சுனா எம். பி. தாக்கியதில் ஒருவர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், பெப். 13

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தன் மீது தாக்குதல் நடத்தினார் என கூறி, நபர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ். நகர் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் உணவருந்த சென்றவேளை அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தன்னுடன் வாக்குவாதப்பட்டு, தன்னை பீங்கானால் தாக்கினார் என்று தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த நபரே தன் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார். (அ)

## அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி நினைவு இல்லம் மூளாயில் திறப்பு



கொழும்பு, பெப். 13

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தலைவர் அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லம் மற்றும் உருவச்சிலை திறப்புவிழா நேற்று காலை நடைபெற்றது.

மூளாய் வீதி மூளாயில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் துதுவர் சாய் முரளி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## நீதியமைச்சர் ஹர்ஷனவுடன் கடற்படைத் தளபதி சந்திப்பு

கொழும்பு, பெப். 13

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட , நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பானது நீதியமைச்சில் நடைபெற்றது.

இதன்படி, இராணுவ மரபுகளுக்கு அமைவாக நடைபெற்ற இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில், 26 ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதிக்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும், இதனை நினைவு கூரும் வகையில் கடற்படைத் தளபதி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சருக்கு நினைவுப் பரிசினை வழங்கினார். (அ)

## மாணவர் குழுக்கள் மோதல்!

கொழும்பு, பெப். 13

கடுவலை பகுதியில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் இரு மாணவர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் மாணவர்கள் சிலர் காயமடைந்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

இரு இல்லங்களுக்கு இடையே ஏற்பட்ட வாய் தர்க்கம் மோதலாக மாறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் நவகமுவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# விரைவில் கைதாகவுள்ளார் முன்னாள் அமைச்சர் ஒருவர்

### சர்ச்சைக்குரிய நிதிப் பரிவர்த்தனை வழக்கு விசாரணைக்கு அமைவாக

கொழும்பு, பெப். 13

**கடந்த அரசாங்கத்தில் பிரதான அமைச்சராக செயல்பட்ட பிரபல அரசியல்வாதி ஒருவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.**

குறித்த முன்னாள் அமைச்சரை இன்று அல்லது நாளை கைது செய்ய பொலிஸார் தயாராகி வருவதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்ச்சைக்குரிய நிதி பரிவர்த்தனை தொடர்பான வழக்கு விசாரணைக்கமைய, இந்த கைது இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த வழக்கு விசாரணை நீண்டகாலமாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மீளப்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சமகால அரசாங்கத்தின் கீழ் அது தொடர்பான வழக்கு மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

## தெற்காசியாவிலேயே புற்றுநோயை குணமாக்கும் உயர் திறன் எம்மிடம்!

### வைத்தியர் மகேந்திர சோமாதிலக்க

கொழும்பு, பெப். 13

நாட்டில் குழந்தைப் பருவ புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் உயர் மட்டத்தில் உள்ளதாக மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் வைத்தியர் மகேந்திர சோமாதிலக்க தெரிவித்தார். தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளை விட இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் உயர் மட்டத்தில் உள்ளதாக மகேந்திர சோமாதிலக்க கூறினார்.

இதேவேளை ஆரம்பத்தில் புற்றுநோயைக் கண்டறிவதன் மூலம் விரைவில் குணப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அடிக்கடி காய்ச்சல் ஏற்படுதல், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருத்தல், கணுக்கால் வீக்கம் ஏற்படுதல் என்பன புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் என வைத்தியர் மகேந்திர சோமாதிலக்க தெரிவித்தார். (அ)

## 2024 இல் விவசாய ஏற்றுமதியால் இலங்கைக்கு அதிக வருமானம்!

கொழும்பு, பெப். 13

விவசாய ஏற்றுமதிகள் ஊடாக, இலங்கை வரலாற்றிலேயே அதிகளவு வருமானம் கடந்த வருடத்தில் ஈட்டப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த ஏற்றுமதிகள் ஊடாக கடந்த ஆண்டில் 89,217 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

44,262 மெற்றிக் தொன் விவசாய ஏற்றுமதிகள் ஊடாக இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மிளகு ஏற்றுமதி மூலமே அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக 51,524 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில், தனியார் பேருந்து மோதியதில், குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பரந்தன் நோக்கி நடந்து சென்ற குடும்பஸ்தர் ஒருவர்மீது அதே திசையில் பயணித்த தனியார் பஸ் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் பரந்தன் - காஞ்சி கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இந்திய மீனவரின் படகுகள் குறித்து அமைச்சர் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணத்தில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது கைப்பற்றப்பட்ட படகுகளின் நிலை பற்றி துறைசார் அமைச்சர் ஆராய்ந்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நேற்று முன்தினம் கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு திடீரென வருகை தந்தார்.

இதன்போது, குறித்த திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட அமைச்சர், முக்கிய பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார். மேற்படி திணைக்களம் ஊடாக மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் முறையாக இடம்பெறுகின்றனவா?, சேவைகளை வழங்குவதில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறான வளங்கள் தேவை, மீனவர்களின் தரவுகள் என்பன பற்றியும் அமைச்சர் கேட்டறிந்தார்.

அத்துடன், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது கைப்பற்றப்பட்ட படகுகளின் நிலை பற்றியும் அமைச்சர் அவதானம் செலுத்தினார்.

அரசாங்கம் மூலம் மீனவர்களுக்கென வழங்கப்படும் நிவாரணங்களை எவ்வித தடையுமின்றி உரியவகையில் பெற்றுக்கொள்வதற்குரிய சூழ்நிலை உள்ளதா? என்பது பற்றியும் அமைச்சர், அதிகாரிகளிடம் வினவினார். (எ-05)

# அடுத்த சில நாட்களுக்கு நாட்டில் பகலில் வெப்பம், இரவில் குளிர்

கொழும்பு, பெப். 13

இன்று வியாழக்கிழமை முதல் அடுத்த மூன்று நாட்களுக்கு பகல் வேளையில் வெப்பமாகவும் இரவு வேளையில் குளிராகவும் வெப்பநிலையில் ஏற்ற இறக்கத்துடன் இருக்கும் என வளிமண்டலவியல் நிபுணர் மலித் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, பதுளை மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் சிறிதளவு மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக சீரான காலநிலை நிலவும்.

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகளிலும் காலி, மாத்தறை, பதுளை மற்றும் குருணாகல் மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் மழை எதிர்பார்க்கப்படுவதுடன், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சீரான வானிலை நீடிக்கும்.

கொழும்பில் இருந்து புத்தளம் ஊடாக மன்னார் மற்றும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையில் வீசுவதுடன் மணிக்கு 35 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன், மணிக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org